Registered No. M-4483

Madras War Review { TAMIL / 14-1-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV | 1944-ம் ஞூ ஜனவரிமீ 14உ, வெள்ளிக்கிழமை | இதழ் 19

போர் வீரர்களின் முக்கிய தளமும் வெடி மருந்து சாலையும்

மிஸ்டர் எல். எஸ். எமரி

மூன்று வருஷங்களுக்கு முன்பு சிட்டி பரானியில் ஆஸ்திரேலியர்களோடு இந்தியப் படைகளும் சரி நிகர் சமானமாய் நின்று போராடி இத்தாலிய அகழிகளைப் பொசுக்கின. ட்யூனிசில் பான் ஆர்னிமைச் சரணடையச் செய்தன. சென்ற வாரமும் கூட ஏட்ரியாடிக் கடற்கரையில் கடுமையாகப் போராடின. அந்தக் காலம் முதல் இது வரை முன்னணியி லிருந்து போராடிக் கொண்டிருந் திருக்கின்றன. இந்தப் படைகள் மேற்கு நோக்கிப் போய் போராடி, வடாப்பிரிக்காவி லிருந்தும், மத்தியதரைக் கடலிலிருந்தும் எதிரிகளை அடியோடு அப்புறப்படுத்தி விட்டு, இத்தாலியை அடி பணியச் செய்தன.

நமது பக்கவாட்டு போலவும் ரஷ்யாவின் முதுகுப் புரம் போலவுமுள்ள சிரியா, ஈராக்கு, பாரசீகம் ஆகிய மிகப் பரந்த பகுதியை யெல்லாம் பாதுகாத்துக் காப்பாற்றிக் கொண்டிருப்பதில், இந்தியப் படைகள் மேற்கொண்ட பணி, ஆடம்பரமானதா யில்லாவிட்டாலும், போர்த் தந்திர முறையில் மிகவும் முக்கியமானதாகும். அன்றியும் ரஷ்யாவிற்கு சப்ளைகள் அனுப்புவதற்கு, முக்கியமான தோர் பாதையை ஆரம்பித்தும் அருந் தொண்டாற்றின. மத்திய கிழக்குப் பகுதியிலுள்ள எல்லாப் படைகளுக்கும் சப்ளைகளும் மற்ற தளவாடங்களும் இந்தியா உதவி யிருப்பதை விட, மேலாகவே படையினரையும் உதவி யிருக்கிறது.

" இவை எல்லாம் பொது நோக்கத்திற்காக மட்டு மன்று ; நாஜி ஆதிக்கம் ஏற்படாதபடி தன் நாட்டைக் காப்பாற்றிக் கொள்ளுவதற் காகவுந் தான். நாஜி ஆதிக்கம் ஏற்பட்டு விடுமானல், எதிர் காலத்தில் சுயேச்சைத்தன்மை முன்னேற்ற மடைந்து பெருமித மடையும் என்னும் நம்பிக்கைக்கு இடமே கிடையாது. ஜெர்மனியை வெல்ல வேண்டியதைப் போலவே ஜப்பானையும் வெல்ல வேண்டியது இந்தியாவுக்குங் கூட, முக்கியந் தான்.

இந்த யுத்தத்தின் முதற் கட்டத்தை விட, இரண்டாங் கட்ட முடிவு காலத்திலுங் கூட, இந்தியா, போர் வீரர்களுக்கு ஒரு முக்கியமான தளமாகவும் வெடி மருந்து சாலையாகவும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டிய நிலையி லிருக்கிறது."

மிஸ்டர் எல். எஸ். எமரி, இந்தியா மந்திரி, ஜனவரி மாதம் 9-ம் தேதி யார்க் நகரத்தில் செய்த பிரசங்கத்தில் கூறியது

பொருளடக்கம்.

	பக்கம்.
முகப்புப் படம் : மிஸ்டர் எல். எஸ். எமரி ..	1
போர் வீரர்களின் முக்கிய தளமும் வெடி மருந்து சாலையும்	1
முரசொலி	2
பாட்டு: வீரத்தாய் தாலாட்டு	2
தலையங்கம் : ரஷ்யாவுக்குத் தொடர்ந்த வெற்றி	3
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4
சென்னை மக்களுக்கு கிரிப்ஸ் நன்றி ..	4
இந்திய நீர் மூழ்கிக் கப்பற் படை	5
படம் : அட்மிரல் சர் ப்ருஸ்பிரேசர் ..	5
10,000 பவுனுக்கு நன்றி	5
மத்தியதரைக் கடற் போரில் விமான ஆதரவுப் பெருக்கம்	6
4 அணு ; 8 அணு நாணயங்கள்	6
படம் : அமெரிக்கக் கப்பற் படையின் புதிய வண்டிக் கப்பல்	6
மாட்டிறைச்சி உணவு	6
அங்கும் இங்கும்	7
யுத்த காலத்தில் அரசாங்க உதவி	7
யுத்த நாட் குறிப்புக்கள்	8

முரசொலி

"கிழக்குப் போர் முனையில் தான் யுத்தம் முடிவடையும். எல்லாப் போர்முனைகளி லிருந்தும் தாக்கு முனைகளி லிருந்தும் கிடைத்துக் கொண்டிருக்கும் தகவல்களைக் கொண்டு பார்த்தால், இப்போது பின்வாங்குவதைவிட, இன்னும் அதிகமாகப் பின்வாங்கும்படி நேரும் என்று தெரிகிறது. அந்தந்தப் பகுதியில் நாடு பிடிப்பதோடமையாமல், போர்முனையையே தவிடுபொடி செய்துவிடும் நோக்கத்தோடு, தம் முழு பலத்தையும், ரஷ்யர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுத்தி யிருக்கிறார்கள்.

—ஒரு ஜெர்மன் இராணுவ அதிகாரி.

* * * * * *

அக்கிரமத்தை எதிர்த்துப் போராட, நேசநாடுகளாகிய நாம் எப்படிக் கற்றுக் கொண்டோமோ, அது போலவே தான், சமாதானமும் செய்து கொள்ள வேண்டும். அதைப் பொருத்துத் தான் முடிவாக வெற்றி நமக்குக் கிடைக்கும் பொழுது நாம் என்ன செய்வோம் என்பதும் நிர்ணயிக்கப் படும்.

—மிஸ்டர் இ. ஆர். ஸ்டெட்டினியஸ்,
அமெரிக்கக் கடன் குத்தகை நிர்வாகி "நியூ யார்க் டைம்ஸ்" பத்திரிகையில் எழுதியது.

வீரத் தாய் தாலாட்டு

இராகம்—நீலாம்புரி

தாளம்—ஆதி

1 வீரகுலத் துதித்த விண்மணியே ! வானொளியே !
ஆரமுதே அன்புநெறி அஞ்சுகமே நித்திரைபோ !

2 அப்பாவைக் காணாத தாலமுதை யோமகனே !
தப்பாது வெற்றியுடன் தான்வருவார் நீயுறங்கு !

3 மக்கள் இனந்தழைக்க மாய்த்து எதிரிகளை
தக்க புகழுடனே தான்வருவார் தாலேலோ

4 ஈன குணஎதிரி எல்லா மடிபணிந்து
ஊன மடையும்வரை வீரமுடன் போர்புரிவார்

5 மெய்வருத்த மும்பாரார் மேன்மைதனை யுங்கருதார்
பொய்யரைத் தன் ஆயுதத்தால் பொடிபொடியாய்ச் செய்திடுவார்

6 வெற்றியுட னல்லாது வீடுதிரும் பேனென்னும்
பெற்றியுடன் போனாரென் பூங்கதிரே நித்திரைபோ

7 நாடுதனைக் காக்கும் நல்லுணர்வு நண்ணியவர்
காடுமலைகளிலே கடுகிப்போ ராடுகிறார்

8 வெற்றி பரிசுகளாம் வீரபதக் கங்கள்பல
பெற்று திரும்பிடுவார் பாங்குடனே நித்திரைபோ !

9 ஜப்பான் எதிரிகளைச் சண்டைமுகத் தேபிடித்து
தப்பாது நின்பணிக்கே தான்கொணர்வார் தாலேலோ

10 அடுக்கி யவர்கள்தலை ஆசனமிட் டேயதன்மேல்
முடுக்கிப் பரணிசொலு முத்துமணி ! நித்திரை போ !

Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ஆண்டு ஜனவரி மீ 14உ, வெள்ளிக்கிழமை | இதழ் 19

ரஷ்யாவுக்குத் தொடர்ந்த வெற்றி

"சிதறி விட்டது; இனி தலை தூக்காது" என்று கூறினார் ஹீட்லர் இரண்டு வருஷங்களுக்கு முன்பு செஞ்சேனையைப் பற்றி. ஆனால் இன்றைய நிலைமை என்ன? செஞ்சேனைகள் மகா வீரத்தோடு தாக்கிப் போராடுகின்றன. அவற்றின் போருணர்ச்சி ஒப்புயர்வற்றது. அவற்றின் தலைவரோ மகா கெட்டிக்காரர். எல்லா நேச நாடுகளும் இன்று அவற்றை வெகுவாகப் பாராட்டுகின்றன.

ஜெர்மன் படைகளுக்குப் போக்குவரவு ஸ்தலமாக விருந்தது பெர்டிச்சேப். டினீப்பர் ஆற்றின் வளைவில் ஜெர்மன் அரண்கள் அனைத்திற்கும் அச்சாணி போன்றிருந்தவை பையலயா, தசெர்கோப் ஆகியவை. இந்த ஊர்களை ஜெனரல் வாடுடின் திடீரென்று தாக்கிச் கைப்பற்றிக் கொண்டார். அன்றியும் கிரிபோகிராடையும் கைப்பற்றினார். டினீப்பர் ஆற்று வளைவில் முக்கியமான கேந்திர ஸ்தானத்தில் இது இருப்பதனால், ஜெர்மானியரின் மற்றொரு முக்கியமான அரணான கிரிவாய் ராக்கின் பாதுகாப்பும் கலகலத்து விட்டது. அன்றியும் கியெபுக்கு மேற்கிலும் வட மேற்கிலும் செம்படைகள் முன்னேறிச் சென்று 1939-ம் வருஷத்திலிருந்த போலந்து எல்லைப்புறத்தையும் கடந்து விட்டன. இந்தப் படைகள் இப்போது ஸ்டாலின்கிராடுக்கு 800 மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. சுமார் ஒரு வருஷத்திற்கு முன்பு தானே யுத்தத்தின் போக்கு இந்த ஸ்டாலின்கிராட் நகரில் மாறியது.

மார்ஷல் ஸ்டாலின் ஒரு கர்ம வீரர். அவர் எந்தக் காரியம் செய்தாலும் மிகவும் நிதான மாகவே செய்வது வழக்கம். கியெப் ஒரு முக்கிய மான கேந்திர ஸ்தான மென்று அவர் எளிதில் கண்டு கொண்டார். அந்தப் பகுதியை ஜெர்மன் படைகள் கடுமையாகத் தாக்க வேண்டு மென்று ஏற்பாடுகள் செய்தார். ஜெர்மானியர்களும் அது போலவே தாக்கினார்கள். அப்போது செஞ்சேனை அருகிலுள்ள காடுகளுக்குள் புகலிடங் கொண்டன. இந்தக் காடுகளுக்குள் ஆயுதந் தாங்கிய வண்டிகள் புகமுடியாது. அந்தச் சமயத்தில் கொரில்லா போர் முறையைக் கையாண்டு எதிரி தளவாடங்களுக்கு மிகுந்த நாசத்தை யுண்டாக்குவது தான் ஸ்டாலின் நோக்கம். இந்த நோக்கம் சரிவர நிறைவேறியது. இதன் பயனாக, ஜெர்மன் பாதுகாப்புப் படைகளுக்கும் மிகுந்த சேதம் ஏற்பட்டது. இப்படிப் பட்ட போராட்டம் ஏறக்குறைய ஒரு மாத காலம் ஜெனரல் வாடுட்டின் தலைமையில் நடந்து கொண்டிருந்தது. இதற்கிடையில் எதிரி கையை சளைக்க வைத்து, பலமான தோர் படையைத் திரட்டி, தாக்க ஆரம்பித்தார். ஆகவே கியெபுக்கு வடமேற்கே ஜெர்மன் படைகள் ப்ரிபெட் சதுப்பு நிலங்களை நோக்கி ஓட வேண்டியதாயிற்று. இப்படிப்பட்ட நிலைமை ஏற்படு மென்று ஜெர்மானியர்கள் கனவிலும் நினைத்தவர்களல்ல. இவ்வாறாக, சோவியத் படைகள் கியெபுக்கு வடக்கேயுள்ள பகுதியை உறுதிப் படுத்திக் கொண்டன. பிறகு, அதாவது இரண்டு வாரங்களுக்கு முன்னதாக, கியெபுக்கு மேற்கேயும் தென் மேற்கேயும் மேற்கேயும் மகா வேகமாகவும் கடுமையாகவும் தாக்கி ஜெர்மன் படைகளைத் திகைக்கச் செய்து சிதறடித்தன. மேற்கே போன சோவியத் படைகள், போலந்து எல்லையையும் கடந்து விட்டன. கோவெல், லப்லின் ஆகியவற்றை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன. மற்றொரு படை ரோப்னோ வழியாக வார்சாவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. இந்தப் பாதைக்கு வடக்கே சதுப்பு நிலங்கள்; தெற்கே மலைகள். ஆகவே இது மிகவும் முக்கியமான தோர் பாதை. இவ்வழியாக சோவியத் டாங்கிப் படைகள் கன வேகமாகப் போய்க் கொண்டிருக்கின்றன.

நிற்க, கியெபுக்குத் தென்மேற்கேயும் தெற்கேயும் ஜெனரல் ரெகுட்டின் படைகள் முன்னேறுவது தான் ஜெர்மானியர்களுக்கு மகா ஆபத்தா யிருக்கிறது. பக், டினீஷ்டர் என்னும் இரண்டு ஆறுகளையும் அவற்றை யொட்டிப் போகும் ஒடெசா-ல்வோவ், வார்சா-பெர்லின் ரயில் பாதையையும் கைப்பற்ற வேண்டு மென்பது தான், சோவியத் படைத் தலைவரின் எண்ணம். டினீப்பருக்குத் தென் பகுதியிலுள்ள ஜெர்மன் ஜெனரல் பான்ஸ்டீன் தலைமைக்குட்பட்ட ஜெர்மன் படைகளுக்குத் தேவையான சப்ளைகளைக் கொண்டு வர இந்த ரயில் பாதை தான் பெரிதும் ஏற்றது. இந்த ரயில்வே பாதையிலிருந்து டினீப்பர் ஆற்று வளைவிற்கு ஒரு ரயில் பாதை பிரிகிறது. சர்க்காசியி லிருந்தும் நிக்கோபோலி லிருந்தும் இந்தப் பாதை வழியாகத் தான் நாஜிப் படைகளுக்கு சப்ளைகளும் தளவாடங்களும் வந்து கொண்டிருக்கின்றன. இப்போது கிரிபோகிராடை செம்படைகள் கைப்பற்றி விட்டன. ஆகவே, இந்த கிளைப் பாதைகளில் ஒன்று துண்டிக்கப்பட்டு விட்டது. வின்னிஸ்டாவுக்கும் பெர்டிச்சேவுக்கும் தெற்கேயிருக்கும் ஷ்மெரிங்கா என்னும் ரயில்வே ஜங்ஷனை சோவியத் படைகள் கைப்பற்றிவிட்டால், முற்கூறிய பெரிய ரயில்வேயும் துண்டிக்கப் பட்டுவிடும். அப்போது ஜெர்மன் படைகளுக்குப் போக, ஒரே ரயில்வே தான் இருக்கும். அது டினிஸ்டர் ஆற்றைக் கடந்து, அதன் முகத் துவாரத்திற்கு 65 மைல்களுக்கப்பால் ருமேனியா நாட்டிற்குள் கொண்டு போய் விடுகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் நாஜிப் படைகள் சிக்கிக் கொண்டு தவிக்க நேரிடும். இப்போது டினீப்பர் ஆற்று வளைவிலிருந்து நிக்கோபோல் வரை பரவிச் சிதறி யிருக்கும் நாஜிப் படைகளை மீட்டுக் கொள்ளுவது என்பது முடியாத காரியம். இப்படிப்பட்ட கடுமையான நிலையி லிருந்துங்கூட, ஜெர்மன் படைகள் ஏன் பின்வாங்காது தற்காத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள் என்பது இங்கே கவனிக்கத் தக்கதோர் பிரச்சினை. இதற்கு அரசியல் காரணத்தைத் தான் சொல்ல வேண்டும். ருமேனியாவில் ஏராளமான எண்ணெய்க் கிணறுகள் இருக்கின்றன. ருமேனியாவோ ஜெர்மானியர் ஆதிக்கத்திற் குட்பட்டிருக்கிறது. ஆகவே ருமேனிய எண்ணெயை ஜெர்மானியர்கள் எடுத்துக் கொள்ளுகிறார்கள். இப்போது ஜெர்மானியர்கள் பல போர்முனைகளிலும் தோற்றுக் கொண்டு வருவதைக் கொண்டு, ஜெர்மன் ஆதிக்கத்தினின்று தாம் விடுபடவேண்டு மென்று, ருமேனியர்கள் விரும்புகிறார்கள். எனவே, ரஷ்யப் படைகள் தெற்கு நோக்கி வந்து ருமேனியாவுக்குள் நுழைந்து

விட்டால், நாஜிகள் பாடு அம்பலத்துக்கு வந்துவிடும். பால்கன் நாடுகளில் அச்சு நாட்டிற்குள்ள ஆதிக்கம் குலைந்து போகும். அப்போது துருக்கியும் தலையிட நேரலாம். இப்படிப்பட்ட ஆபத்தான நிலைமை ஏற்படாதபடி தடுக்கும் பொருட்டுத் தான் நாஜித் தலைவர்கள் அரும்பாடு படுகிறார்கள். அவர்கள் பாடு பலனளிக்குமா என்பது தான் கேள்வி.

"சிதறிவிட்டது ; இனி தலை தூக்காது" என்று இரண்டு வருஷங்களுக்கு முன் ஹிட்லர் கூறிய மொழிகள் பொய்த்து விட்டன என்பதை அவர் ஒப்புக் கொண்டுதானாகவேண்டும். வேறு வழியில்லை. அவருடைய ஆடம்பர அலங்காரப் பேச்சு அவமதிப்படைந்தது. மார்ஷல் ஸ்டாலினோ, "சிறிய பாம்பாயிருந்தாலும் பெரிய தடி கொண்டடிக்க வேண்டும்" என்னும் கொள்கை யுடையவர். எனவே, தன் காரியத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கிறாரே தவிர, அவசியமில்லாத மொழிகளைப் பேசுவதே கிடையாது. வெற்றிக்கு வழி கோருபவர் ஹிட்லரா ? ஸ்டாலினா ?

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

பால்கன் நிலைமை : அச்சமும் அதிருப்தியும்

டினீப்பர் ஆற்றின் தென் பகுதியில் ரஷ்யப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இதனால் பால்கன் நாடுகளில் ஏற்படக் கூடிய சாதக பாதகங்களை எல்லோரும் வெகுவாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். பஸ்ஸரேபியாவிலுள்ள பொது மக்கள் அனைவரும் ஊரை விட்டு வெளியேறி விட வேண்டுமென்று ருமேனிய அரசாங்கக் கட்டளை பிறந்திருப்பதாக, ஜனவரி மாதம் 5-ம் தேதி அங்காராவிலிருந்து அறிவிக்கப்பட்டது. ரஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் போர் மூண்ட பிறகு, இந்த ஊரில் மீண்டும் ருமேனியர்கள் குடியேறினார்கள். டினீஸ்டர் ஆற்றங்கரையை ஜெர்மானியர்கள் அவசர அவசரமாக அரண் செய்தனர். இப்போது ருமேனியாவும் பல்கேரியாவும் மிகுந்த அதிருப்தியும் மகத்தான அச்சமும் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. நேச நாட்டு வெடிகுண்டு விமானங்கள் எளிதில் பறந்து செல்லக்கூடிய தூரத்தில் தான், ருமேனிய தலை நகரான புகாரெஸ்ட் இருக்கிறது. ஜெர்மன் முகாம்களை விட்டு வெளியேறி விட வேண்டு மென்று சில மாதங்களாக ருமேனியர்கள் எண்ணுவது பற்றி யாரும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தக் காரணத்தால் தான் துருக்கியின் கருத்தை யறிய ருமேனியா முயன்று கொண்டிருந்தது. சுமார் 6 மாதங்களுக்கு முன்பு துருக்கியின் கருத்தை யறிய வேண்டி ருமேனியப் பத்திரிகைகள் முயன்று கொண்டிருந்தன, ஏனென்றால் அப்போது தான் நேச நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள சந்தர்ப்பம் உண்டாகு மென்று நினைத்தார்கள்.

"யுனிவர்சல்" என்னும் பத்திரிகை சென்ற ஜூன் மாதம் 17-ம் தேதி கீழ்கண்டவாறு எழுதியது :—

> சமாதானத்தையும், ஒத்துழைப்பையும் நாடுகளின் பாதுகாப்பையும் முன்னிட்டு பால்கன் நாடுகளில் எந்த முறையைக் கையாண்ட போதிலும் "புதிய துருக்கி" அதற்கு எப்பொழுதும் ஆதரவு கொடுத்து வந்திருக்கிறது. டான்யூப் ஆறு கருங்கடலில் சங்கமமாகுமிடம் ருமேனியாவிற்கு மிகவும் முக்கியமானது என்று துருக்கிக்கு நன்றாகத் தெரியும். அது போலவே, துருக்கிக்கு டார்டெனெல்ஸ் ஜலசந்தி மிகவும் முக்கியமானதென்று ருமேனியாவுக்கும் தெரியும். துருக்கியும் ருமேனியாவும் பலமாகவும் நேசமாகவும் ஒன்றுபட்டிருந்தால், பால்கன் நாடுகளைத் தாக்கவோ, அவற்றின் விவகாரங்களில் தலையிடவோ பிறரைத் தடுக்கவும், சுயேச்சையைப் பாதுகாக்கவும், உள்ள பாதுகாப்புக்களை விருத்தி செய்து கொள்ளவுங் கூடும்."

இப்படிபட்ட கருத்துக்கள் பத்திரிகைகளில் வெளிவருவதை ஜெர்மனி வெறுத்தது. ருமேனியர்கள் தாம் பால்கன் வாசிகள் என்னும் உணர்ச்சியே யில்லாதிருந்தவர்களென்றும், இந்த உணர்ச்சி வியென்னா வரை பரவிய போதுங்கூட அவர்களுக்கு அந்த உணர்ச்சி இருந்ததில்லையென்றும் ஜெர்மன் பத்திரிகைகள் எழுதின.

சென்னை மக்களுக்கு கிரிப்ஸ் நன்றி

இழ்க்கண்ட தந்தி, சர் ஸ்டாபோர்ட் க்ரிப்சிடமிருந்து சென்னை கவர்னர் மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப் அவர்களுக்கு 1943-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி கிடைத்தது :—

"மேலும் தாராளமாக 7,500 பவுன் உதவிய சென்னை மக்களுக்கு எனது மனமுவந்த நன்றியைத் தயவு செய்து தெரிவிக்கவும். இவ்வளவு தாராளமாகச் சென்னை வாசிகள் கொடுத்த தொகையைக் கொண்டு ஒரு விமானப் படையை யமைக்க முடிந்தது. வெற்றிப் போராட்டத்தில் இது ஒரு முக்கியமான பங்கு கொள்ளும்."

ஆன்டனெஸ்குவின் மாறு தந்திரம்

சென்ற வருஷம் ஜூன் மாதக் கடைசியில் ருமேனியாவின் இரண்டாவது மந்திரியும், அந்நிய நாட்டிலாக்கா மந்திரியுமான மிகெய் ஆன்டனெஸ்கு ரோமாபுரிக்குப் போனார். அங்கே புறப்படு முன்னதாக பல பிரகடனங்களை வெளியிட்டார். அவற்றில் இத்தாலியின் நேசத்தைக் கோரினார். ருமேனியாவுக்கும் லத்தின் சார்புகள் உண்டு என்று கூறி உறவு கொள்ள விரும்பினார். அவரது நோக்கம் லத்தின் கோஷ்டியாக ஒரு துண்டை அமைத்துக் கொண்டு போப்பாண்டவரின் துணைக் கொண்டு நேச நாடுகளோடு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டு மென்பது தான் அவருடைய எண்ணம் என்று தெரிகிறது. இவருக்கு ஆதரவு கிடைக்கவில்லை. லத்தின் சார்புகளைக் கூறியுங் கூட, இத்தாலி இசைவதா யில்லை. ஜெர்மனியும் இத்தாலியும் தனக்கு ஆதரவு தரவில்லை யென்பதைக் கண்டார். ஆகவே, கடைசியாக ஒரே ஒரு புகல் தான் ருமேனிய அரசாங்கத்திற்கு இருந்தது. அது தான் ருமேனிய மன்னரான மைக்கேல். இந்த மன்னர் நாஜிகளுக்கு ஆதரவாக வில்லை, முசாலினி வீழ்ச்சிக்கு முன்பு இத்தாலி அரசர் எம்மானுவெல் எந்த நிலையிலிருந்தாரோ, அதே நிலையில் தான் ருமேனிய மன்னர் மைக்கேலும் இருந்தார். அவர் பெயரளவில் தான் அரசர். சட்ட சம்பந்தமாகவும் நிர்வாக சம்பந்தமாகவும் உள்ள எல்லா அதிகாரங்களையும் நிர்வாகியான மைக்கேல் அன்டனெஸ்கு தான் வகித்து வந்தார். பொது மக்களுக்குத் தம் அரசரிடம் உள்ள மதிப்பைக் குறைக்கத் தக்க சில செயல்களை முன்பு புரிந்தவரும் இவர் தான்.

திடீரென்று நிலைமை மாறியது. சென்ற இரண்டு வருஷங்களாக மன்னரும் நிர்வாகியும் ஒருங்கே தோன்றியதே கிடையாது. சென்ற வருஷம் ஜூலை மாதம் இரண்டாவது மந்திரியான மிகெய் ஆன்டெனெஸ்கு சகிதம் பொது மக்கள் முன்பு விஜயம் செய்யத் தலைப்பட்டார்கள். இந்த இரண்டு ஆன்டெனெஸ்குக்களின் நோக்கம் இப்போது வெளியாகிறது. தாம் எந்த அரசருடைய உண்மையான ஆதிக்கங்களைப் பறித்தார்களோ, அவரையே ஒரு பாதுகாப்பாக இப்போது பயன் படுத்துகிறார்கள்.

சமீபத்தில் ருமேனியா குலைந்து விடுமா ? குலையுமென்று எதிர் பார்ப்பது புத்திசாலித் தனமாகாது. ஏனென்றால் ருமேனியா மீதும் பல்கேரியா மீதும் ஜெர்மானியர்கள் கொண்டுள்ள ஆதிக்கம், முன் போலவே தானிருக்கிறதாகத் தெரிகிறது. ஆனால் ஒரு விஷயம் மட்டும் தெளிவாகத் தெரிகிறது. இந்த இரண்டு பால்கன் நாடுகளிலும் யுத்தத்தினின்று தப்பக்கொள்ள வேண்டும் எனனும் ஆசை மிக அதிகம். ஏனென்றால், இந்த யுத்தத்தில் ஜெர்மானியர்கள் முன்பே தோற்றுவிட்டார்கள் என்று தான், ருமேனியர்களில் பெரும்பாலோரும் பல்கேரியர்களிற் பெரும்பாலோரும் கருதுகிறார்கள்.

இந்திய நீர்மூழ்கிக் கப்பற் படை

பயிற்சிசாலைக்குப் பத்திரிகைக்காரர்கள் விஜயம்

எச். எம். ஐ. எஸ். மச்லிமார் ஒரு போர்ப் பயிற்சிக் கப்பல். இந்தக் கப்பலில் சென்ற வாரம் ஒரு விழா நடை பெற்றது. அது பயிற்சி சாலையின் ஆண்டு விழா. கப்பல் வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. இந்த விழா மரியாதையை இந்தியக் கப்பற் படைத் தலைவர் கமோடோர் ராட்ரே ஏற்றுக் கொண்டார். அப்போது அங்கொரு அணி வகுப்பு நடை பெற்றது. அங்கே தான் மரியாதை செலுத்துவது வழக்கம். அந்தப் படையினருக்கு கமோடோர் ராட்ரே ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். அந்தச் சொற் பொழிவில் கப்பற் படையினர் செய்து கொண்டு வரும் வேலை எவ்வளவு முக்கியமானது என்று விளக்கினர்.

எம். எம். ஐ. எஸ். மச்லிமார் கப்பலின் நோக்கம். நீர்மூழ்கிக் கப்பல்கள் எதிர்ப்புப் போராட்டத்தில், இந்திய கப்பற் படையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் ஆட்களுக்கும் பயிற்சி யளிப்பது தான. அதாவது, கடலுக்குள் மூழ்கி, எதிரி நீர் மூழ்கிக் கப்பல்களைக் கண்டு பிடித்து, மூழ்கடிப்பது மட்டுமல்ல ; கடலுக்குள் எதிரி நீர் மூழ்கிகள் வந்து நேச நாட்டுக் கப்பல்களை மூழ்கடிக்காமல் பாதுகாப்பதுங் கூடத் தான். இந்தப் பயிற்சி சாலையில், பிரிட்டிஷ் கப்பற் படையைச் சேர்ந்த ஒரு சிலரும், நேச நாடுகளைச் சேர்ந்த கப்பற் படையினரில் ஒரு சிலரும், பயிற்சி பெறுகிறார்கள்.

இந்தப் பயிற்சி சாலைக்கு பத்திரிகைப் பிரதிநிதிகள் சமீபத்தில் விஜயம் செய்தார்கள். அபபோது பயிற்சி வகுப்பு நடந்து கொண்டிருந்தது. எதிரி நீர் மூழ்கிக் கப்பல்களை எப்படிக் கண்டு பிடிப்பது ? இயந்திரங்களை எப்படிக் கையாளுவது ? என்று அங்கே போதிக்கப்பட்டன. இவற்றை அந்தப் பத்திரிகைப் பிரதிநிதிகள் பார்த்தார்கள். அங்கே ஒரு இருட்டறை இருக்கிறது. அதில் ஒரு இயந்திரம். ஒரு நீர் மூழ்கிக் கப்பலை ஒரு போர்க் கப்பல் எப்படி விரட்டிக் கொண்டு போவது என்பதை அதைக்கொண்டு விளக்கிக் காட்டினர்கள். உத்தியோகஸ்தர்களும் சிப்பாய்களும் தத் தம் இயந்திரங்களைக் கொண்டு எப்படி வேலை செய்கிறார்கள் என்றும் காட்டப்பட்டது. இப்படி உத்தியோகஸ்தர்களும் சிப்பாய்களும் சேர்ந்து வேலை செய்வதன பயனுக, எதிரி நீர் மூழ்கிக் கருகில் போர்க் கப்பல்கள் வந்து, ஆழத்தில் பாயந்து தாக்கக் கூடிய தளவாடங்களைக் கையாள இயலும். உணவுச் சாலையையும் உறங்குமிடத்தையுங் கூட பத்திரிகைப் பிரதிநிதிகள் பார்வையிட்டார்கள்.

இந்த யுத்தம் ஆரம்ப மானதிலிருந்து, பல கப்பற் படை உத்தியோகஸ்தர்களும் சிப்பாய்களும், நீர் மூழ்கிகளைக் கண்டு பிடிப்பதிலும் அவற்றை நாசஞ் செய்வதிலும் தேர்ச்சி பெற்று தகுதி வாய்ந்திருக்கிறார்கள். இவர்கள் நடுக் கடலுக்குப் போய் இந்தியாவிற்கு வரும் கடற்பாதைகளையும் கப்பல் போக்கு வரவுகளையும் பாதுகாத்துக் கொண்டு வருகிறார்கள். அன்றியும், இந்தியக் கப்பற் படையில் வேலை செய்யும் இவர்கள், பந்தோபஸ்த் வேலையிலும் பாரா வேலையிலும் ஈடுபட்டிருக்கும் போது, கீழச் சமுத்திரத்திலும், ஐரோப்பியக் கடல்களிலும் பல நீர் மூழ்கிக் கப்பல்களை வேட்டையாடி யிருக்கின்றனர். கப்பற் படை நிபுணர்களான இவர்களுக்கு, இந்த யுத்த காலத்தில் மதிப்பு அதிகம். எப்படி என்றால், கடந்த மகா யுத்த காலத்தில் (1914-18) நேச நாட்டுக் கப்பல்களை எதிரி நீர் மூழ்கிக் கப்பல்கள் தாக்கியது போலவே, இப்போதும் தாக்குகின்றன. எதிரி நீர் மூழ்கிக் கப்பலை எப்படி மூழ்கடிப்பது என்று இந்தப் பயிற்சி சாலையில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

இதற்கு முன்பு இந்தப் பயிற்சி சாலை அமைந்திருந்த இடம் மிகச் சிறிதா யிருந்தது. இங்கே பயிற்சி பெற வந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. இன்னும் அநேகர் பயிற்சி பெற வேண்டி யிருக்கிறது. ஆகவே தான், எச்.எம்.ஐ.எஸ். மச்லிமார் கப்பலை இதற்கென்று விட்டு விட்டார்கள். இது மிகப் பெரியது. ஏராளமான இடமுண்டு. தற்கால இயந்திரங்கள் எல்லாம் வேண்டிய மட்டும் அமைந்திருக்கின்றன.

இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், இந்தப் பள்ளிக் கூடத்தில் உத்தியோகஸ்தர்களாகவும் சிப்பாய்களாகவும் படிக்கிறார்கள். இவர்களில் அநேகர் தென்னிந்தியர். இவர்கள் தம் போர்த் தொழிலில் தேர்ந்திருப்பது போலவே, தந்திரமாக சமயோசித புத்தியோடு நடந்து கொள்ளுவதிலும் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். ஏற்கெனவே, கப்பற் படைத் தேர்ச்சி பெற்ற சிப்பாய்கள் இப்போது, நீர் மூழ்கிக் கப்பற் போராட்டத்தைக் கற்றுக் கொள்ளும் பொருட்டு, மீண்டும் இந்தப் பயிற்சி சாலையில் சேருகிறார்கள். இந்தப் பயிற்சிக்குப் பிறகு நடை பெறும் பரீட்சையில் தேறி, தகுதிப் பத்திரம் பெற்று அந்த வேலையில் ஈடுபட்டிருந்த பிறகும் திரும்ப வந்து, அந்தத் துறையில் மேலும் பயின்று உயர்ந்த உத்தியோகங்களுக்குத் தம்மைத் தகுதியுடையவர்களாக்கிக் கொள்ளுகின்றனர். இங்கே அவர்கள் கற்றுக் கொள்ளும் மின்சார வேலைப் பயிற்சி, எதிர் காலத்தில் பெரிதும் அவர்களுக்குப் பயன் படும்.

அந்த விழாக் கொண்டாட்டத்தின் போது, கப்பல் தளத்தில், படையினர் அணிவகுத்து நின்றனர். அதற்கு மேலே வெள்ளைக் கொடி பறந்தது. கமோடோர் ஏ. எச். ராட்ரே அங்கு விஜயம் செய்த போது, அப்பள்ளிக்கூடத் தலைவரான கமாண்டர் பி. இ. கென்டால், ஆர். என். அவரை வரவேற்றார். தனக்கு அமைக்கப்பட்டிருந்த மரியாதை அணி வகுப்பைப் பார்வையிட்ட பிறகு, அங்கு கூடியிருந்த படையினருக்கு ஒரு பிரசங்கம் செய்தாரென்று ஏற்கெனவே குறிப்பிட்டோம். அப்போது, சென்ற ஒரு வருஷ காலத்தில் எத்தனையோ வகைக் கஷ்டங்களுக்கிடையே இந்தப் பள்ளிக்கூடம் எவ்வளவு தூரம் முன்னேறி யிருக்கிற தென்று விளக்கிக் கூறினர். மேலும் அவர் கூறியதாவது :—

"இன்று ஏற்பட்டிருக்கும் பலனைக் கொண்டு பார்த்தால், இந்தப் பயிற்சி சாலையின் கமோடோர் முதல் மிக இளையவரான சிப்பாய் வரையில், மன உறுதியோடு உழைத்திருக்கிறீர்களென்று தெரிகிறது. இது பற்றி எனக்கு மிகவும் திருப்தி தான். நீங்கள் செய்யும் வேலை எவ்வளவு முக்கியமானது என்பதை யுணர்ந்து, இனியும் அது போலவே தொடர்ந்து வேலை செய்வீர்கள் என்றும் நம்புகிறேன்."



அட்மிரல் சர் ப்ருஸ் ப்ரேஸர், கே.சி.பி., கே.பி.இ.

சென்ற டிசம்பர் மாதம் 26-ம் தேதி மாலை வடமுனைக்கு அப்பால் 'ஸ்கார்ன் ஹார்ஸ்ட்' என்னும் ஜெர்மன் கப்பலோடு போராடி மூழ்கடித்த இங்கிலாந்து கப்பற் படையின் தலைவர்.

10,000 பவுனுக்கு, நன்றி

சென்னை கவர்னர் யுத்த நிதி கௌரவப் பொருளாளர் கீழ்க் கண்ட பொருளுள்ள கடிதத்தை சென்னையிலுள்ள கிரேக்க மீட்சி அப்பில் கௌரவப் பொருளாளருக்கு 1944-ம் வருஷம் ஜனவரி மாதம் 3-ந் தேதி எழுதி யிருக்கிறார் :—

"லண்டனிலுள்ள கிரேக்க செஞ்சிலுவை நிர்வாகக் கமிட்டித் தலைவருக்கு அனுப்பும்படி தாங்கள் என்னைக் கோரியதற்கிணங்க, சென்ற மாதம் 21-ம் தேதி தந்தி மூலமாக 21000 பவுன்கள் அனுப்பப்பட்டது சம்பந்தமாக, லண்டனிலிருந்து 1943-ம் வருஷம் டிசம்பர் மாதம் 29-ம் தேதி எனக்குக் கிடைத்த தந்தியின் நகலை தங்கள் தகவலுக்காக அனுப்பி யிருக்கிறேன் :

"பத்தாயிரம் பவுனையும் நன்றி யோடு பெற்றுக் கொண்டோம். எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கோருகிறோம்."

"பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் சிப்பாய்களுக்கும் ஒரு வார்த்தை. இப்போதுள்ளதை விட, உங்கள் வேலை மேலும் முக்கியமான தெனக் கருதப்பட வேண்டிய பருவம் விரைவில் வரப் போகிறது. அதாவது, கிழக்கே யுத்தம் கடுமையாகும் போது தான். அதற்கிடையில் உங்கள் பயிற்சி முடிந்து தேறி தகுதி வாய்ந்தவர்களாகி விடுவீர்கள். நீங்கள் இங்கே கற்கும் பாடங்களை மறந்து விடாதீர்கள். அவற்றை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்."

அன்று மாலை பயிற்சி சாலை மைதானத்தில் 'ஹாக்கி', 'புட்பால்' போட்டிப் பந்தயங்கள் நடை பெற்றன. அன்றிரவு வாரண்ட் பள்ளிக்கூட ஆசிரியர் பெரோஸ் ஷா அவர்கள் எழுதிய 'அனார்கலி' என்னும் நாடகத்தை பயிற்சி சாலை மாணவர்கள் நடித்தனர்.

மத்தியதரைக் கடற்போரில் விமான ஆதரவுப் பெருக்கம்

விங் கமாண்டர் எல். எப். பிரேசர்.

சாங்ரோ மோரோ ஆறுகளைக் கடந்து பிகாராவுக்குப் போவது மகா கடினமான தோர் வேலை. இந்த வேலையை, எட்டாம் படை செய்து முடித்தது. இப்போது சான் பிஸ்ரோ என்னு மிடத்தை ஐந்தாம் படை வளைந்து கொண்டிருக்கிறது. விமானப் போராட்டத்தில் ஒருவருக் கொருவர் தொடர்பு கொண்டு போராடுவது எவ்வளவு முக்கியமான தென்று இது விளக்குகிறது.

1941-ம் வருஷம் எகிப்தின் மேல் பகுதியிலுள்ள பாலைவனத்தில், தான் முதன் முதல் பிரிட்டிஷ் விமானப் படையையும் நேசதேச விமானப் படையையும் பெருக்கினோம். அங்கே 'ஹரிகேன்' விமானங்கள், டோமஹாக் போர் விமானங்கள், மேரிலான்ட்லேட் வெடிகுண்டு விமானங்கள், முதலியவைகளைக் கொண்டு முதலில் அமைந்த விமானப் படை தான், பிறகு பெரிய விமானப் படையாக மாறியது. இது, தக்க பருவத்தில், மகா கடுமையாகத் தாக்கும் பலமும் பெற்றது. இந்தப் படை விரிவடைந்தது மட்டுமல்ல. எட்டாம் படை அமைந்த காலம் முதலிருந்தே, தரைப் படைக்கும் விமானப் படைக்கும் பொதுவான ஒரு தலைமைக் காரியாலயம் அமைந்தது. இதன் தலைவர் விமான மார்ஷல் கானிங்ஹாம். பாலைவனப் போரில் விமானப் படைத் தலைவராக இவர் இருந்தார்.

இந்த தலைமைக் காரியாலயத்தில் வேலை செய்து கொண்டிருந்த பதினெட்டாம் படை பதினைந்தாம் படையாக மாறியது. அனுபவத்தைக் கொண்டு இங்கே செய்யப்படும் வேலை முறைகளைத் திருத்தி யமைத்தார்கள். எனவே தான் ஜெனரல் அலெக்சாந்தருக்குத் தேவையான உதவிகளெல்லாம் செய்ய அவரால் முடிந்தது.

டெட்டர் திட்டம்

தரைப் போராட்டத்திற்கு விமானப் படை எவ்வளவு உபயோகமுள்ளது என்று வடாப்பிரிக்கப் போராட்டத்தின் கடைசி பகுதியில் வெகு தெளிவாகத் தெரிந்தது. அப்போது ஏர் சிப் மார்ஷல் டெட்டர் ஒரு முறையை வகுத்தார். அதன்படி, ஏக காலத்தில் விமானப் படைகள் எல்லாவற்றையும் கொண்டு தாக்கினார். இவ்வாறாக, கனத்த வெடிகுண்டு விமானங்கள் எதிரி கேந்திர ஸ்தானங்களைத் தவிடு பொடி செய்து கொண்டிருக்கும்போது, மற்ற போர் விமானங்களும் வெடிகுண்டு விமானங்களும் கூடப் போராட்டத்திற் கலந்து கொண்டன. அதன் பிறகு தான், மூவகைப் படைகளும் ஏக காலத்தில் சிசிலியைத் தாக்க முற்பட்டன. என்றாலும், விமானங்கள் எவ்வளவு தூரம் பறந்து சென்று போராடலா மென்று சாலெர்னோவில் நம் படைகள் போய் இறங்கிய போது தான், தக்கபடி பரீட்சிக்கப்பட்டது. நமது படைகள் இத்தாலியில் இறங்கியபோது, அவற்றிற்குப் பாதுகாப்பாக ஆகாயத்தில் நமது விமானங்கள் வட்டமிட்டுக் கொண்டே காவல் புரிந்து கொண்டிருந்தன. அதற்குப் பிறகு தான், இத்தாலியில் விமான தளங்கள் அமைத்துக் கொள்ள இயன்றது.

தன் விமான மோட்டிகளின் திறமையை ஏர் மார்ஷல் கானிங்ஹாம் நன்கு தெரிந்து கொண்டிருந்தார். அச்சமயம் நெடுந்தூரம் பறந்து செல்லக் கூடிய விமானங்களும் ஏராளமாய் இருந்தன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு, ஒரு புதிய திட்டத்தை மிகவும் தைரியமாக வகுத்தார்.

இருமடங்கு குண்டுகள்

எதிரியின் ரோடுகள், ரயில்வே போக்குவரவுகள், பீரங்கி ஸ்தலங்கள், கப்பல்கள், சப்ளை டிப்போக்கள் விமானக் கூடங்கள் முதலியவற்றை கொஞ்சமும் இரக்க மில்லாமல் நிர்தூளியாக்கிக் கொண்டிருந்தார்கள். வடாப்பிரிக்கப் போராட்டத்தின் கடைசி காலத்தில் நேச நாடுகளுக்கிருந்த, விமான பலத்தை விட, இப்போது 2 பங்கு அதிக பலம் அமைந்திருக்கிறது. இந்த விமானங்களின் அழிக்கும் சக்தி முன்னைய விட 3 பங்கு அதிகப் பட்டிருக்கிறது.

4 அணு ; 8 அணு நாணயங்கள்

வளைந்த கரையுள்ள நாலணு நிக்கல் நாணயங்களும், 1940-ம் வருஷம் அடிக்கப்பட்ட 6-வது ஜார்ஜ் சக்கரவர்த்தியின் தலை முத்திரையுள்ள சாதாரண அரை ரூபாய் கால் ரூபாய் நாணயங்களும் செல்ல மாட்டா வென்னும் தப்பு அபிப்பிராயம் பொது மக்கள் இடையே இருந்து வருகிறது. இது தவறு.

உண்மையான கால் ரூபாய் நாணயங்க ளெல்லாம் செல்லத் தக்கவை தான். அவை சாதாரணமாகவோ வளைந்த கரையுள்ளவை யாகவோ இருந்தாலும் செல்லும். 1940-ம் வருஷமும் அதற்குப் பிறகும் செலாவணி யிடபட்ட அரை ரூபாய் கால் ரூபாய் நாணயங்களும் செல்லத் தக்கன. ஆனால் 1940-ம் வருஷத்திற்கு முன்பு, செலாவணி யிடப்பட்ட 6-வது ஜார்ஜ் முத்திரையுள்ள வெள்ளி அரை ரூபாய் நாணயம் மட்டுந் தான் செல்லாது.



அமெரிக்கக் கப்பற் படையின் புதிய வண்டிக் கப்பல்

இது கடலிலும் நீந்திச் செல்லும்; தரையிலும் தாவிப் போகும். மணற் பாங்கான தரையில் விரைந்து போவதை இப்படம் காட்டுகிறது. கப்பல்களிலிருந்து சாமான்களை ஏற்றிக்கொண்டு வந்து கரை சேர்க்க இது பெரிதும் உதவுகிறது.

மாட்டிறைச்சி உணவு

இராணுவத்திற்கு மாட்டிறைச்சி வேண்டியிருக்கிறது. இதன் பொருட்டு மாடுகளைக் கொல்லுகிறார்கள். இதனால் மாட்டினத்திற்கே நிரந்தரமான சேதம் நேரலாம். இதைத் தடுக்க வேண்டியது அவசியம். இதை இந்தியா அரசாங்கத்தார் உணர்ந்தனர். ஆகவே, 10 வயதிற் குட்பட்ட நல்ல உடல் நிலையோடு வேலை செய்து கொண்டிருக்கும் எருதுகளையும், கறவைப் பசுக்களையும், கரு வாய்த்திருக்கும் பசுக்களையும் கொல்லக் கூடா தென்று தடை செய்திருக்கிறார்கள். பொது மக்களின் உபயோகத்திற்காக நல்ல நிலையிலுள்ள மாடுகளும் கொல்லப்படுவதாக சென்னை மாகாண அரசாங்கத்தாருக்குத் தெரிய வருகிறது. கால் நடைகள் முன்னேற்ற போர்டார் சமீபத்தில் நடத்திய தோர் கூட்டத்தில், இது சம்பந்தமாக ஒரு சிபார்சு செய்திருக்கிறார்கள். அதில் இந்தியா அரசாங்கத்தார் தடை செய்திருப்பவை மட்டுமன்றி, பொது மக்களின் உபயோகத்திற்காகவோ, இராணுவ உபயோகத்திற்காகவோ, வரண்ட பசுக்களையாவது, பசுங் கன்றுகளையாவது வேலை செய்யக் கூடிய எருதுகளையாவது கொல்லக் கூடா தென்றும், இன விருத்திக்குப் பயன்படக் கூடியவை என்று மேற் பார்வை உத்தியோகஸ்தர் கருதக் கூடிய பசுக்களைக் கொல்லும் பொருட்டு விற்கிறவர்கள் தண்டிக்கப்பட வேண்டு மென்றும் சிபார்சு செய்திருந்தனர். இந்த சிபார்சுகளை அரசாங்கத்தார் ஏற்றுக் கொண்டு உடனே அவற்றை அமுல் நடத்துவ தென்று முடிவு செய்து விட்டனர்.

ஆகவே, இனி யாரும், நேர் முகமாகவோ அல்லது தம் ஏஜெண்டு மூலமாகவோ, இராணுவ உபயோகத்திற்காவது, பொது மக்கள் உபயோகத்திற்காவது இறைச்சி சப்ளை செய்ய வேண்டி, கீழ்க்கண்ட வகை மாடுகளை வாங்கவோ, வாங்கும்படி செய்யவோ, கொலை செய்யவோ, கொல்லும்படி செய்யவோ கூடாது:—

1. நல்ல உடல் நிலையிலுள்ள, வேலைக்குத் தகுதியான 10 வயதிற் குட்பட்ட எருதுகள், எருமைகள்.
2. கறவைப் பசுவும், கறவை எருமையும்.
3. கருத்தாங்கி யிருக்கும் பசுவும் எருமையும்.
4. இன விருத்திக் கேற்ற வரண்ட பசுக்களும் எருமைகளும் பசுங் கன்றுகளும்.

விளக்கம்.—முற் கூறிய தலைப்புகளுக்கு ஒரு மாடு உட்பட்டதா அல்லவா என்பது பற்றிய பிரச்சினை யெழுந்தால், உட்பட்டதாகத் தான் கருதப்பட வேண்டும். ஆனால், இந்தத் தலைப்புகளுக்கு அது உட்பட்டதல்ல வென்று ஒரு 'வெடெர்னரி அசிஸ்டென்ட் சர்ஜன்' பதவிக்குக் குறையாத ஒரு மிருக வைத்திய உத்தியோகஸ்தர் ஒரு சாட்சிப் பத்திரம் கொடுத்திருந்தால் மட்டுந்தான் அது ஒப்புக்கொள்ளப்படும்.

அங்கும் இங்கும்

நரியைப் போல் தந்திரமான பிராணி எதுவுமில்லை என்பார்கள். ஆனால் அது செய்யும் காரியங்களை யாரும் பாராட்டுவதே கிடையாது. தனியாக ஒரு மனிதன் அதனிடம் சிக்கிக் கொண்டு விட்டால், அது தன் பின்னங் கால்களால் மண்ணை வாரி விட்டு, அந்த மனிதன் தன் கண்களைத் திறக்க முடியாதபடி செய்து விடும். அப்புறம் அவன் மீது பாய்ந்து அவனைப் பிடுங்கி எறிந்து விடும். ஆனால், நான்கு பேர்கள் சேர்ந்து வந்தால், நரியானது எங்கேயாவது பதுங்கிக் கொண்டு விடுமாம். இந்த நரிக் குணத்தை யாராவது பாராட்டுவார்களா? எப்பொழுதும் அதற்கு ஒரு திருட்டுக் குணம் உண்டு. கிராமங்களிலே ராத்திரி வேளைகளில் புகுந்து, கோழிக் குஞ்சு, வாத்து எல்லாவற்றையும் திருட்டுத் தனமாகத் தூக்கிக் கொண்டு போய் விடும். வேடன் கையில் லேசில் சிக்காது. ஆகவே, அதைத் தந்திரமாகத் தான் பிடித்து உதைப்பார்கள்.

ஹிட்லரையும் ஒரு பெரிய நரி என்று தான் சொல்ல வேண்டும். எல்லோரும் அயர்ந்திருக்கும் பொழுது தான், அவர் தமது படைகளைப் பல சிறு கோழிக் குஞ்சு நாடுகள் மீது ஏவி, அவற்றைப் பிடித்துக் கொண்டு விட்டார். ஆனால் இப்பொழுது வேடர்கள் ஒன்று சேர்ந்து விட்டார்கள். அதோடு, இந்த நரியை ஒரு முரட்டுக் கரடி (ருஷ்யாவிலிருந்து ஸ்டாலின்) பிடிக்க முயன்று கொண்டிருக்கிறது. அதற்காகவே அது ஒரு பெரிய வலை வீசி யிருக்கிறது. இந்த வலையிலே நரி நன்றாகச் சிக்கிக் கொண்டு விட்டால், அதோடு அதன் கதை தீர்ந்தது மாதிரி தான்.

இது என்ன வலை என்று கேட்பீர்களே! ஹிட்லரது படைகள் இன்னும் ருஷ்ய மண்ணிலிருந்தே போராடிக் கொண்டிருக்கின்றன. ருஷ்யப் படைகள் ஜெர்மன் படைகளுக்குச் சரியான வேலையும், பலமான பூசையும் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ருஷ்யப் படைகள் சென்ற ஆறு மாதங்களில் நானூறு மைல்கள் முன்னேறி யிருக்கின்றன. நானூறு மைல்கள் என்றால், எல்லாம் சிமிட்டி பூசிய சமதளம் அல்ல. காடுகளும், மலைகளும், சேறு நிறைந்த பூமியுமாகவே இருந்திருக்கின்றன. இந்த நானூறு மைல்களுக்குள் அடங்கிய பிரதேசங்களும், 1939-ம் வருஷத்திலே, ருஷ்யாவோடு சமரசம் பேசி, போலந்தைப் பங்கு போட்டுக் கொண்டாரே, அப்பொழுது வரைந்த பாகக் கோடு, பக் என்ற நதியோடு ஓடுகிறது. அந்த நதியை அடைய இன்னும் நூற்றைம்பது மைல்கள் போனாலே போதும். இதை எண்ணிப் பார்த்த ஹிட்லருக்கு பக், பக் என்று மனம் அடித்துக் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமா?

இப்பொழுது ருஷ்யப் படைகள் முன்னேறி யிருக்கும் இடத்திலிருந்து, அசல் ஜெர்மன் நகரம் ஒன்று 370 மைல்களுக்குள் இருக்கிறது. ருஷ்யப் படைகள் நிற்பதாகவே இல்லை. அவை போகும் வேகத்தைப் பார்த்தால், சீக்கிரமே அவை சாக்ஷாத் ஜெர்மன் மண்ணிலே நின்று போர் புரியத் தொடங்கிவிடும் போலிருக்கிறது. அவ்வாறு அவை போர் புரியத் தொடங்கினால், ஹிட்லர் அடித்த ஜம்பம் எல்லாம் வீணாகி, உலகோரே அவரைப் பார்த்துச் சிரிக்கும்படி ஆகிவிடும் என்பதிலும் சந்தேகமேயில்லை. போன மகா யுத்தத்திலேகூட இம்மாதிரியான நிலைமை ஏற்படவில்லை. கெய்சர் அந்த நிலைமை ஏற்படுவதற்கு இடங் கொடுக்கவில்லை. அந்நிய நாட்டு மண்ணிலேயே போர் நின்று விட்டது. ஆனால், இம்முறை நேச நாட்டினர் தவறு செய்யப் போவதில்லை. யுத்தத்தை நேரே ஜெர்மனியின் ஹிருதயத்திற்கே கொண்டு போகத் தீர்மானித்திருக்கிறார்கள். அங்கு யுத்தம் போன பின், ஹிருதயம் இரும்பாலாகியதாக இருந்தாலும், தூளாகி, இரத்தக் குழாய்கள் உடைந்து, கோரமான முடிவை அடைந்து விடாதா? ஹிட்லர் வேண்டாதது அது தான். நேச தேசத்தார் வேண்டுவது அதுவே தான். இம்முறை ஜெர்மனிக்குக் கொடுக்கும் அடியிலே, அது திரும்பவும் ஜன்ம ஜன்மத்திற்கு, உலக சமாதானத்தைக் குலைக்க, தலை தூக்கவும் முடியாது.

ரொம்ப தூரம் போய் விட்டோமே பேச்சு வாக்கில். ஜெர்மன் படைகள் ருஷ்ய மண்ணில் அல்லவா இருக்கின்றன. வெகு காலமாகச் சேகரித்த பலம் அல்லவா? ஆகவே, அவை கோரமாகவே போராடுகின்றன. எங்கும் லேசிலே விட்டுக் கொடுப்பதில்லை. பிணக்குவியல்கள் ஆங்காங்கே விழும்படி செய்து கொண்டிருக்கின்றன. அந்தக் குவியல்களைத் தாண்டியே ருஷ்யர்கள் போக வேண்டி யிருக்கிறது. இந்த நிலைமையில் ஸ்டாலின் தந்திரமாக எப்படி ஜெர்மானியருக்கு வலை வீசி யிருக்கிறார் தெரியுமா? ருஷ்யப் படைகளை ஒரு குறிப்பிட்ட இடத்திலே பத்திரமாக நிறுத்தி, தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும்படி உத்திரவிட்டார். ஜெர்மானியரை அப்படியே போராடத் தூண்டி விட்டு விட்டார். எதிரிகள் அலுத்துப் போகும் வரை போராடட்டும்; அவர்கள் கல் சுவர் மீது மண்டையை மோதவிட்டுக் கொள்ளுவது போல் காரியத்தை நடத்தட்டும்; 'அப்பாடா!' என்று அவர்கள் தளர்ந்து நிற்பார்கள் அல்லவா, அந்தச் சமயத்திலே ருஷ்யப் படைகளை முன்னேறித் தாக்கச் சொல்லலாம் என்று தீர்மானித்தார். இவ்வாறு செய்யவும் செய்தார். அவரது தந்திர வலையிலே ஜெர்மன் படைகள் சிக்கிக் கொண்டிருக்கின்றன. டினீப்பர் நதி வளைவிலே சிக்கிக் கொண்டு தவிக்கும் ஜெர்மன் படைகளையே நாம் குறிப்பிடுகிறோம். ருஷ்யப் படைகள் திடீரென்று அங்கங்கே யிருந்து முன்னேறியதும், ஜெர்மானியர் ஒன்றுந் தெரியாது திகைத்துப் போய்விட்டனர். தலை தப்பினால் போதுமென்று ஓடவேண்டிய நிலைமை வந்துவிட்டது அவர்களுக்கு. பல நூறு மைலகள் பரந்து கிடக்கும் படைகளுக்கு மேற்கொண்டு உணவும், ஆயுதமும் சப்ளை செய்வது சிரமமென்று கண்டனர். போர்முனையின் அகலத்தைக் குறுக்கிக் கொண்டே வருகிறார்கள். அவ்வளவுக் கவ்வளவு ருஷ்யர்களுக்கு லாபமு மிருக்கிறது; நஷ்டமு மிருக்கிறது.

லாபம் என்னவென்றால், வெகு சுலபமாக பல ஊர்களைப் பிடிக்க சாத்தியமாவது தான், அதோடு, அதிக ஆள் சேதமும், கால தாமதமும் ஏற்படாதல்லவா? நஷ்டம் என்னவென்றால், குறுகிய போர்முனையில் ஜெர்மானியர் சேர்ந்து நின்று தாக்கும் பொழுது, அவர்கள் தாக்கும் வேகம் அசாத்தியமாக இருக்குமல்லவா? அவ்வளவுக் கவ்வளவு ருஷ்யர்களிடை நஷ்டம் அதிகமாகுமல்லவா?

ஜெர்மானியர் நஷ்டத்திற்குக் கணக்கில்லை

ஜெர்மன் படைகளுக்கு இதுவரை ஏற்பட்ட நஷ்டங்களுக்குச் சரியான கணக்கே இல்லை, இப்பொழுது ஹிட்லர் அந்த நஷ்டக் கணக்கைப் பார்ப்பதாகவும் இல்லை. அந்தக் கணக்குப் பார்க்கத தொடங்கிவிட்டால், ருஷ்யர்கள் திடீரென்று பெர்லின் நகர வாசலில் வநது நின்றாலும் நின்று விடுவார்கள் என்ற பயம் ஹிட்லருக்கு இருக்கக் கூடும். அதனால் அவர் பல்கேரியா, ருமேனியா ஆகிய இரு நாடுகள் வழியாகவும் மளமளவெனப் புதுப் படைகளைக் கிழக்குப் போர்முனைக்கு அனுப்பிய வண்ணமே யிருக்கிறார். அவரது சேனாபதி எங்காவது எதிர்த் தாக்குதல் நடத்தினால் தான், ருஷ்யர்களின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தலாம். ஆனால் அதற்கான ஆள், ஆயுத பலமெல்லாம் அவருக்கு சீக்கிரமே கிடைக்குமா என்பது சந்தேகம். மொத்த மொத்தமாகவல்லவா பறிகொடுக்க வேண்டி யிருக்கிறது. ஸ்டாலின்கிராடில் இரண்டு லக்ஷம்; அதற்கப்புறம் பல லக்ஷங்கள், கிரைமியாவில் சில லக்ஷங்கள் சிக்கிக் கொண்டிருக்கின்றன, இப்ட்ராய்ருஸாவில் சில லக்ஷங்கள். இப்பொழுது யூக்ரேனில் சில லக்ஷம் படைகளுக்கு எள்ளும் தண்ணீரும் விட்டு, ஸ்டாலினார்ப்பணம் என்று விட்டுவிடுவது என்றால் சும்மாயிருக்கிறதா? அது ஜெர்மன் சேனாபதியைத் தப்பு வழியில் தான் கொண்டுபோய் விடுகிறது. அவர் போகிற வழி தானே அவரது படைகளும் போகவேண்டும். அந்த வழி போகும் படைகள் பாழாகப் போவதில் ஆச்சரிய மொன்று மில்லையே! ஹிட்லர் தான் எத்தனை தடவை சேனாபதிகளை மாற்றுவார். சேற்றிலே போய் இறங்கியாயிற்று. இனிமேல் உடம்பு அழுக்காகப் படாது, வேஷ்டி கெடப் படாது என்று பார்த்தால் முடியுமா? ஏதோ நடக்கிற வரை நடக்கட்டும், நாசமாகிறவரை நாசமாகட்டும் என்று தீர்மானித்து விட்டார் போலிருக்கிறது அவர்.

ருமேனியாவும் பல்கேரியாவும் அவரது இரும்புப் பிடிகளில் சிக்கி, தாமாக எதும் செய்ய முடியாம லிருக்கின்றன. ஆகவே, அந்நாடுகளை ஏழரை நாட்டான் பிடித்ததுபோல் தானினி.

நேசதேசத்தார் ஐரோப்பா மீது பாயும் தேதியைக் கூடக் குறித்துவிட்டார்களாம். படையெடுப்பிற்கான ஏற்பாடுகள் எல்லாம் வெகு துரிதமாக நடந்து வருகின்றன. ஜெர்மனியின் ஜீவ நாடிகளையெல்லாம் குண்டுகள் வீசித் தகர்க்கிறார்கள் நேசதேச விமானிகள். மேகங்கள் கூடுகின்றன. பெரும் புயல் மேற்கிலிருந்து பிரமாதமாக ஐரோப்பா மீது வீசப்போகிறது. அதிலே சிக்கி ஜெர்மனியும், ஹிட்லரும், அவரது கோணல் கட்சியைச் சேர்ந்தவர்களும் அடித்துக் கொண்டு போகப் படுவார்கள் என்பது திண்ணம். புயலுக்குப் பின் அமைதி தோன்றுவதும் நிச்சயம், அந்த அமைதிக் காலத்திலே என்னென்ன செய்யலாம் என்பதையும் ஒரு கோஷ்டியார் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வேலை இனி வர்வர அதிகமாகும். விடுதலை யடையும் நாடுகளை சம்ரக்ஷிக்க வேண்டிய பொறுப்பு அவர்களது அல்லவா?

இத்தாலியிலே!

இத்தாலியிலே ரொம்ப ரொம்ப மெதுவாகத் தான் போர் நடந்து கொண்டிருக்கிறது. ஜெர்மானியர் லக்ஷக்கணக்கில் படைகளைக் கொண்டு வந்து சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தள்ளிக் கொண்டல்லவா முன்னே போகவேண்டும்? ஜெர்மன் படை பலம் அதிகமாகிறதென்று தெரிந்தும் நம்மவர்கள் சும்மா இல்லை! இவர்களும் பெரிய படைகளைச் சேர்த்துக் கொண்டு தானிருக்கிறார்கள். எந்த நிமிஷத்திலும் பயங்கரப் போர் மூளக் கூடும். அம்மாதிரி போர்கள் தானே எல்லாவற்றையும் முடிவுகட்டும்?

யுத்த காலத்தில் அரசாங்க உதவி

செங்கற்பட்டு ஜில்லா.

சென்ற மாதம் மழை யில்லாமல் வெயிலாக இருந்ததினால், பயிர்கள் நன்றாகச் செழித்து வளர்ந்திருக்கின்றன. இவ்வருஷம் நன்செய் பயிர்கள் நல்ல பலனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரோட்டுகள் நன்றாகச் செப்பனிடப் பட்டிருக்கின்றன.

ஜில்லா கலெக்டர் அவர்கள் உத்திரவுப்படி சமீபத்தில், காஞ்சிபுரம், செங்கல்பட்டு டவுன்களில் பங்கீடுத் (ரேஷன்) திட்டம் அமுலுக்கு வரப் போகின்றது. இதற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டு, கணக் கெடுக்கப்பட்டு வருகின்றது. இதனால் இனி அரிசி பஞ்ச மில்லாமல் அனைவருக்கும் பங்கீடு செய்யப்படும். இப்பொழுது அரிசி விலை குறைவாக இருந்த போதிலும் (ரூபாய்க்கு மூன்று படி) பங்கீடு திட்டத்தின் கீழ் 2½ படிக்கு மேல் விற்க முடியாது. அடுத்த அறுவடையை எதிர் நோக்கி இத்திட்டம் அமுலுக்கு வருகிறது. அதிகமான நெல் கிடைக்குமானால் இத்திட்டத்தின்படி, விலைகளை குறைக்கவும் கூடும்.

ஸ்டாண்டர்டு துணிகள் மலிவாக விற்பதனால் பொது மக்கள் அவற்றையே அதிகமாக உபயோகிக்கிறார்கள். பெண் பாலார் அனைவரும் இவற்றையே விரும்புகிறார்கள். ஜில்லாவின் உட்பாகங்களில் இன்னும் அதிகக் கடைகளை ஏற்படுத்தும்படி வேண்டுகோள்கள் வருகின்றன.

மண் எண்ணெய் இப்பொழுது பங்கீடு திட்டத்தின்படி எல்லாருக்கும் ஓர் அளவுக்கு கிடைக்கிறது

நீலகிரி ஜில்லா.

நீலகிரி தேசீயப் போர் முன்னணியின் உதவி அமைப்பாளர், கௌரவ அமைப்பாளர், தாலூகா பிரசாரகர்கள் முதலியோர் டிசம்பர் மாதத்தில் மூன்று விதங்களில் பொது ஜனங்களுக்கு உதவி புரிந்திருக்கின்றனர்:—

முதலாவதாக யுத்தத்திற்குச் சென்றிருக்கும் வீரர்களின் குடும்பங்கட்கு யாதொரு இடைஞ்சலும் நேராதவாறு உதவி புரிந்துள்ளனர். திரு. மு. ஹாலைய்யா, உதவி அமைப்பாளர், சுமார் 10 வீரர்களின் இல்லங்கட்கு விஜயம் செய்துள்ளார்.

இரண்டாவதாக மற்ற தேசங்களிலிருந்து நமது தேசத்திற்கு வந்திருக்கும் மக்களின் (Evacuees) கணக்கை யெடுப்பதற்கு வேண்டிய பிரசாரமும், மற்ற உதவிகளையும் நீலகிரி தேசீயப் போர் முன்னணி புரிந்து வந்துள்ளது.

கடைசியாக, அரிசி பங்கீடுத் திட்டத்தைப் பொது மக்களுக்கு பிரசார வண்டியின் மூலமாகவும் மற்றும் பொதுக்கூட்டங்களின் மூலமாகவும் நன்கு விளக்கிக் காட்டி யிருக்கின்றனர்.

யுத்த நாட் குறிப்புகள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

ஜனவரி 4.—ஜெர்மன் இளைஞர்கள் அனைவரும் யுத்த சேவைக்கு வந்து சேர வேண்டு மென்று ஜெர்மன் அரசாங்கக் கட்டளை பிறந்திருக்கிறது.

ஜனவரி 7.—பெர்லின் நகரத்தில் முக்கால் பங்கு நாசமாக்கப்பட்டதாக விமானப் படைத் தலைவர் ஜெனரல் ஆர்னல்ட் குறிப்பிட்டார்.

மேலும் கனடியப் படைகள் பிரிட்டனுக்கு வந்து சேர்ந்தன.

ஜனவரி 8.—பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானப் படையைச் சேர்ந்த 'மஸ்கிடோ' விமானங்கள் மேற்கு ஜெர்மனியிலுள்ள குறிப்பான இடங்களைத் தாக்கின.

ஜனவரி 9.—அமெரிக்கப் படையைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் மெட்டல் ஸ்மித் இப்போது ஜெனரல் அய்சினோவருடைய பிரதம உத்தியோகத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அமெரிக்காவும் அட்லாண்டிக்கும்.

ஜனவரி 4.—கடைசியாக ஐரோப்பாவைத் தாக்க ஆரம்பிக்கும் போது, அந்தப் போராட்டத்தின் எல்லா விதத் தேவைகளுக்கும் வேண்டிய கப்பல் சாதனங்கள் கட்டாயம் கிடைக்கு மென்று அமெரிக்கக் கப்பற் படைக் கமிஷன் தலைவர் ரியர் அட்மிரல் எமரி எஸ்மாண்ட் குறிப்பிட்டார்.

தம் சொந்த சொத்தாகிய நியூயார்க் ஹைட் பார்க்கிலுள்ள 35 ஏக்கர் நிலத்தையும் அமெரிக்க அரசாங்கத்திற்குக் கொடுத்து விட்டதாக மிஸ்டர் ரூஸ்வெல்டும் அவரது மனைவியாரும் ஒரு பத்திர மெழுதிக் கொடுத்து விட்டனர்.

யுத்தத்திற்குப் பிறகு, புனர் நிர்மாண வேலைகளையும் வியாபாரத்தையும் எப்படி நடத்துவது என்பது பற்றி ஆலோசிக்கும் பொருட்டு 44 நாடுகளுக்கு அமெரிக்கா அழைப்பு அனுப்பி யிருக்கிறது.

ஜனவரி 5.—அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலான "பம்பானோ" காணமற் போய் விட்டது.

ஜனவரி 6 —1944-ம் வருஷத்தில் இந்த யுத்தத்தின் முடிவான போராட்டம் நடை பெறு மென்று மிஸ்டர் ரூஸ்வெல்ட் குறிப்பிட்டார்.

ஜனவரி 7.—1943-ம் வருஷத்தில் 85,946 இராணுவ விமானங்கள் கட்டப்பட்டதாக, அமெரிக்க யுத்த உற்பத்தி போர்டார் தெரிவித்தனர்.

ஜனவரி 8.—1944-ம் வருஷம் மகா கடுமையானதா யிருக்கு மென்று மிஸ்டர் வென்டல் வில்கி கூறினார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஜனவரி 4.—இந்தியக் கப்பற் படை யினருக்கு தாராளமாக உணவு வழங்க ஜனவரி மாதம் 1-ம் தேதி முதலே ஏற்பாடாகி யிருப்பதாகத் தெரிகிறது.

பர்மாவைக் கைப்பற்றிய பிறகு, அங்கே இந்தியர்களின் நிலைமை எப்படி யிருக்கவேண்டு மென்பதைப் பற்றி, பம்பாய் கனம் டாக்டர் கரே தலைமையில் பலர் சாதாரணமாகக் கூடி விவாதித்தார்கள்.

ஜனவரி 5 —காலஞ்சென்ற ஹவில்தார் மேஜர் செலுராமின் கைம் பெண்ணுக்கும், ஜமேதார் காஜிகலேயுக்கும் மேன்மை தங்கிய வைசிராய் பிரபு, விக்டோரியா க்ராஸ் பதக்கத்தை யளித்தார்.

ஜனவரி 7.—ஏனங்குவாங், ஹீஹோ, ப்ரோம், ஆக்யாப் ஆகிய ஊர்களைத் தாக்கியதாக தென்கிழக்கு ஆசியப் படைத் தலைவர் விடுத்த அறிக்கை கூறுகிறது.

ஜனவரி 8.—இந்தப் போரில் இந்தியர்கள் செய்த அருஞ் சேவைகளைப் பாராட்டி, பிரிட்டிஷ் படையினருக்கு வழங்கப்படுவது போலவே, இந்தியப் படையினருக்கும் கௌரவங்கள் வழங்கப்பட வேண்டு மென்று மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் கட்டளை யிட்டிருக்கிறார்.

ரஷ்யாவும் பின்லந்தும்.

ஜனவரி 4.—போலிஷ்-ரஷ்ய எல்லையை கோர்ச்சாக் படைகள் பல விடங்களில் கடந்து விட்டன.

ரஷ்யர்கள், பலையத் செர்கோப் என்னு மிடத்தைக் கைப்பற்றிக் கொண்டனர்.

ஜனவரி 5.—ஐந்து நாட்கள் கடும் போராடிய பிறகு, பெர்டிசேப் என்னு மிடத்தை ரஷ்யர்கள் கைப்பற்றினார்கள்.

யுத்தத்திற்கு முன்பிருந்த எல்லைப் புரத்திற்கு மேற்கே 35 மைல் தூரத்திலுள்ள சார்னி என்னு மிடத்தை ரஷ்யர்கள் அடைந்து விட்டார்கள்.

1939-ம் வருஷத்திய எல்லைப்புரத்தை சோவியத் படைகள் கடந்து விட்டது சம்பந்தமாக ஏற்பட்டுள்ள நிலைமைபற்றி விவாதிக்கும் பொருட்டு, லண்டனிலுள்ள போலந்து மந்திராலோசனை சபைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

ஜனவரி 6.—க்ரிபாய்-ராக்குக்கு வடக்கிலும், கிரொபோக்ராடுக்குக் கிழக்கிலும் முழு மூச்சாக யுத்தம் நடை பெறுகிறது.

ரஷ்யப் படைகள் போலந்து எல்லைக்குள் நுழைந்தது சம்பந்தமாக போலிஷ் அரசாங்கத்தார் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

ஜனவரி 7.—கிரோபோக்கிராடை செஞ்சேனைகள் வளைந்து கொண்டன.

ஜனவரி 8.—கிரோபோகிராடை இரண்டாவது உக்ரேனியப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ஜனவரி 9.—பொல நோயி என்னுமிடத்தை ரஷ்யர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

ஜனவரி 10.—ஒடெசா-போலந்து ரயில்வேயை சோவியத் படைகள் அணுகிக் கொண்டிருக்கின்றன.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

ஜனவரி 4.—கடும் பனி காரணமாக 8-ம் படையும் 5-ம் படையும் வெகுவாக முன்னேறக் கூட வில்லை.

ஜனவரி 5.—சாண்டொமோசோவிற்குத் தென் மேற்கே யுள்ள முக்கியமான தோர் இடத்தை 8-ம் படை கைப்பற்றியது.

ஜனவரி 6.—சான் விட்டோர் என்னும் கிராமத்தில் ஒரு பாதியை 5-ம் படை கைப்பற்றி விட்டது.

பிரிட்டிஷ் எட்டாம் படைத் தலைவராக லெப்டினெண்ட் ஜெனரல் சர் ஆலிவர் லீஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

8 எதிரி கப்பல்களை பிரிட்டிஷ் நீர் மூழ்கிக் கப்பல்கள் தாக்கி மூழ்கடித்தன.

ஜனவரி 7.—சான்விட்டோர் என்னும் ஊரில் கடுமையான போர் நடை பெறுகிறது.

ஜனவரி 8.—சான்விட்டோர் கைப்பற்றபட்டது. எட்டாம் படைப் போர் முனையில் கடுமையான போராட்டம் நடைபெறுகிறது.

ஜனவரி 9.—குயிஸ்தோவை 5-ம் படை கைப்பற்றியது.

இத்தாலியிலுள்ள நேசதேச ஆதிக்கக் கமிஷன் தலைவராக லெப்டினெண்ட் ஜெனரல் மேசன் மக்பெர்லேன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நேற்று, மத்தியதரைக்கடல் போர் முனையில் நேசநாட்டுப் படைகளின் பிரதம படைத் தலைவராக பதவி ஏற்றுக் கொண்டார்.

டிபுடி பிரதம படைத் தலைவர் பதவியை ஜெனரல் டேவர்ஸ் ஒப்புக் கொண்டார். லெப்டினெண்ட் ஜெனரல் ஏ. எச். காமெல் பிரதம உத்தியோகத் தலைவராக நியமனம் பெற்றிருக்கிறார்.

ஜனவரி 10.—5-ம் படை 2 மைல்கள் முன்னேறி 3,800 அடி உயரத்திலுள்ள கடினு வாக்சியோ என்னுமிடத்தைக் கைப்பற்றியது.

பெக்சியா என்னும் ஆற்றை பிரிட்டிஷ் படைகள் கடந்து விட்டன.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி கைப்பற்றிய நாடுகள்.

ஜனவரி 4.—பாஸ்டிகலாயை அமெரிக்கப் படைகள் தாக்கின.

மத்திய கிழக்குப் போர் முனையில் வைக்கப்பட்டிருந்த யூகோஸ்லாவ் படைகளைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களும், ஏட்ரியாடிக் கடலுக்கு அப்பாலிருந்து போராடிக் கொண்டிருந்த இத்தாலியப் படையினரும் மார்ஷல் டிட்டோவுடன் சேர்ந்து கொண்டனர்.

ஜனவரி 5.—டாக்டர் பினேஷ் லண்டன் வந்து சேர்ந்தார்.

ஜனவரி 6.—யூகோஸ்லாவிய தேசபக்தர்கள் 600 பேர்களை ஜெர்மன் ரகசியப் போலீசார் கைதி செய்திருக்கின்றனர்.

ஜனவரி 8.—பிரான்சுக்குள்ளாகவே எப்படி எதிர்ப்பது என்பது பற்றி விவாதிக்க பிரன்சு ஆலோசனைக் கமிட்டி கூடியது.

நடு நிலைமை நாடுகள்.

ஜனவரி 4.—எகிப்திய முதன் மந்திரி நகாஸ் பாட்சா செனெட் சபையில் பேசும் போது, பிரிட்டனோடு நேசமாயிருப்பதனால் எதிர் காலத்தில் எகிப்துக்கு என்னென்ன நன்மைகள் உண்டு என்று விளக்கிக் கூறினார்.

ஜனவரி 7.—ஸ்பெய்னின் எதிர் கால நிலைமை பற்றி, ஜெனரல் பிராங்கோ ஒரு அறிக்கை வெளியிட்டார்.

ஜனவரி 9.—எகிப்திய அரசாங்க, அந்நிய நாட்டுக் காரியாலயத்தில் லெபனன் அரசாங்கத்திற்கும் எகிப்திய அரசர்ங்கத்திற்கும் கூட்டு அரசியல் பற்றிய விவாதங்கள் ஆரம்பமாயின. அப்போது அந்த இருநாடுகளின் பிரதம மந்திரிகளும் விஜயம் செய்திருந்தனர்.

தூரக் கிழக்கு நாடுகள்.

ஜனவரி 5.—அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் மார்ஷல் தீவுகளைத் தாக்கின.

ஜனவரி 6 —நியூ கினியில் பின்ஸ்சேபனுக்கு வடக்கே யிருந்த ஜப்பான் படையினர் அங்கே யிருந்து 35 மைல்களுக்கு அப்பாலுள்ள ஓரிடத்தில் பாசறை அமைத்துக் கொண்டார்கள்.

நியூகினியின் வடகரையில் கம்பி முனைக்கருகில் ஆஸ்திரேலியப் படைகள் இறங்கி யிருக்கின்றன.

ஜனவரி 7.—ஜப்பானோடு நடை பெறும் போராட்டத்தைக் குறித்து கப்பல் படைத் தகவல் இலாக்காவைச் சேர்ந்த அட்மிரல் சர் வில்லியம் ஜேம்சும், தென் பசிபிக் படைத் தலைவர் அட்மிரல் வில்லியம் ஹால்சியும் ஒரு அறிக்கையை வெளியிட்டார்கள்.

சான் பிரான்சிஸ்கோவில் வழக்கப்படி நடை பெறும் மகா நாட்டிற்குப் போய் விட்டு அட்மிரல் நிமிட்ஸ் பெர்ல் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தார்.

ஜனவரி 8.—பசிபிக் சமுத்திரத்திலும் கீழக்கோடிப் போர் அரங்கத்திலும், 10 எதிரி கப்பல்களை அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடித்து விட்டதாக அமெரிக்கக் கப்பற் படை யிலாக்கா அறிக்கை கூறுகிறது.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, " VICTORY HOUSE ", MOUNT ROAD, MADRAS.